**தேர்ச்சி - 1 இன்றைய அறிவுபூர்வமான சமூகத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியலின் மூல எண்ணக்கருக்களையும் பங்களிப்பையும் பிரயோகத்தையும் மையமாகக் கொண்டு ஆராய்வார்.**

**தேர்ச்சி மட்டம் - 1.1 தகவலின் அடிப்படைக் கட்டற் துண்டத்தையும் அதன் சிறப்பியல்புகளையும் விசாரிப்பார்.**

விளக்கமுள்ள தகவல்களை உருவாக்குவதற்கு தரவுகளை முறைமைக்கு உள்ளீடு செய்ய வேண்டும். தரவு முறைவழியாக்கத்தின் பின் தகவலாக்கப்படும்.

1. தரவு வாழ்க்கை வட்டத்தின் கட்டங்களை ஒழுங்குமுறையில் எழுதுக.
2. தரவு மற்றும் தகவல்கள் ஆகிய சொறபதங்களை விளக்குக.
3. தரவு காணப்படக்கூடிய வடிவங்கள் எவை?
4. தரவின் வகைகளை குறிப்பிட்டு அவற்றை விளக்குக.
5. பின்வருமாறு உள்ள மாணவர் ஒருவர் தொடர்பான தரவுகளை அளவுசார், பண்புசார் தரவுகளாக வேறுபடுத்தி அட்டவணைப்படுத்துக.
    - வயது – 19
    - உயரம் - 160cm
    - கண்களின் நிறம் - கபிலம்
    - தலைமயிரின் நிறம் - கறுப்பு
    - நிறை – 54kg
    - கணித பாட புள்ளிகள் - 74
6. பெறுமதி மிக்க தகவல்களின் சிறப்பியல்புகள் எவை?